


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 25.10.2018

We Shine Academy™

guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்
- பொருளாதார நிகழ்வுகள்














## தமிழக நிகழ்வுகள்

- சென்னை பெருநகரத்திற்குள் வெள்ளம் ஏற்படுவதை கண்காணிப்பதற்காக, சென்னை வெள்ள எச்சரிக்கை அமைப்பு **(C-Flows)** என்ற அமைப்பை, தேசிய கடல் ஆராய்ச்சி மையம் **(NCCR – National Centre For Coastal Research)** தொடங்கியுள்ளது.
    - மிக அதிக மழைப் பொழிவினால் கடல்மட்ட உயர்வின் மூலம் நகருக்குள் வெள்ளம் ஏற்படுவதை 6 தொகுதிகளைக் கொண்ட இந்த அமைப்பு கண்காணிக்கும், மேலும் C-Flows ஆனது TN-SMART உடன் இணைக்கப்பட்டுள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- அணுக்கரு இணைவினை ஒரு ஆற்றல் மூலமாக பயன்படுத்த நேரடித் தொடர்பிற்கான புதுமையான கருத்துக்களை ஏற்படுத்தவும், இயற்பியலின் முக்கிய விஷயங்களையும், தொழில்நுட்பக் கூறுகளையும் விவாதிப்பதற்கான 27வது இணைவு ஆற்றல் மாநாடு **(Fusion Energy Conference – FEC 2018)** குஜராத்தின் காந்தி நகரில் நடைபெற்றது.
    - இம்மாநாடானது, சர்வதேச அணு சக்தி முகமையால் **(International Atomic Energy Agency – IAEA)** ஒருங்கிணைக்கப்பட்டது.

- **அசாமின் துபரி(Dhubri)** என்ற பகுதியை **மேகலாயாவின் புல்பரிக்கு(Phulbari)** இணைக்கும் இந்தியாவின் மிக நீண்ட ஆற்றுப்பாலமானது பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே 2026-27ல் அமைக்கப்படவுள்ளது.
    - 19.3 கி.மீ. நீளத்திற்கு 4 வழித்தடத்தையுடைய இந்தப் பாலமானது 203 கி.மீ. வழியான சாலைப் பயணத்தை குறைக்கும். இந்தப் புதிய பாலமானது அசாமில் இருந்து மேகலாயா வரையிலான NH 127 – B யின் விடுபட்ட இணைப்பை நிறைவு செய்யும்.
- குறிப்பு:
    - 2017ல் பிரதமரால் தொடங்கப்பட்ட 9.15 கி.மீ. நீளமுடைய **'தோலா – சடியா'(Dhola-Sadiya)** பாலமானது தற்போது இந்தியாவின் மிக நீண்ட ஆற்றுப்பாலமாக உள்ளது

குறிப்பிடத்தக்கது.

## உலக நிகழ்வுகள்

- பிராந்தியப் பாதுகாப்பு நடைமுறையில் ஆசியான் நாடுகளுக்கும் அதன் உறுப்பு நாடுகளுக்கும் யுக்திசார் பேச்சுவார்த்தை மற்றும் நடைமுறை ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான **12வது ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாடு (ADMM – Asian Defence Ministers Meeting) மற்றும் 5வது ADMM Plus** மாநாடு ஆகிய இரண்டும் சிங்கப்பூரில் நடைபெற்றுள்ளது.
- குறிப்பு:
    - ADMM (Asian Defence Minister Meeting) – 2006 முதல் நடைபெற்று வருகிறது.
    - ADMM – Plus – மாநாடு 2010 முதல் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

- **வில்லா புயல் Hurricane Villa** - மெக்சிகோவின் கடற்கரை நகரங்களை “வில்லா புயலானது” சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்து தாக்கியுள்ளது.

## விருதுகள்

- ஐக்கிய நாடுகள் தொழில் மற்றும் மேம்பாட்டு அமைப்பின் சார்பில், வளர்ச்சி திட்டங்களுக்கு முதலீடுகளை அதிக அளவில் பெற்றதற்கான விருதை, **UN Investment Promotion Award** முதலீடு வளர்ச்சி அமைப்பான **“இன்வெஸ்ட் இந்தியா” (Invest India)** பெற்றுள்ளது.
    - ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெற்ற விழாவில், இந்த விருதை, Invest India – வின் தலைமை செயல் அதிகாரி (CEO), **தீபக் பாக்லா Deepak Bagla** பெற்றார்.

## முக்கிய தினங்கள்

- உலக தகவல் வளர்ச்சி தினம் **(World Development Information**

**Day) – அக்டோபர் 24.**

- ○ உலகளவில் முன்னேற்றம் மற்றும் பிரச்சனைகளை கண்டறிந்து அதனை உலக தகவல் வளர்ச்சியின் மூலம் தீர்ப்பதற்காக, ஐ.நா. சபையானது ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 24ம் நாள் உலக, தகவல் வளர்ச்சி தினமாக அனுசரித்து வருகிறது.
- ○ இத்தினமானது 1973ம் ஆண்டிலிருந்து கொண்டாடப்படுகிறது. ஐ.நா. அவையானது 1972 – ம் ஆண்டு, அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

## பொருளாதார நிகழ்வுகள்

- தேசிய மென்பொருள் மற்றும் சேவைகள் நிறுவனங்களின் கூட்டிணைவானது (NASSCOM – **National Association of Software and Services Companies**) மத்திய கிழக்கு நாடுகளில் இந்திய வர்த்தகங்களை விரிவுபடுத்துவதற்காக துபாய் இணைய நகரத்துடன் (**Dubai Internet City**) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
  - ○ இந்த ஒப்பந்தமானது மத்திய கிழக்கு மற்றும் வடக்கு ஆப்ரிக்கா (MENA – Middle East and North Africa) பிராந்தியத்தில் ஏற்பட்ட முதலாவது ஒப்பந்தமாகும்.